முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்
ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1495

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.11.2023,** வியாழக்கிழமை

1. அண்ணலே ஞான கலியுகத்தின் குருவே
ஆற்றலாய் தர்மத்தை வளர்த்துக்கொண்டே
மண்ணுலகை காத்துவருகின்ற அரங்கனே
மாதவசியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. சிந்தைபட ஞான அறிவுரை ஆசி
செப்பிடுவேன் சோபகிருது துலை திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 16ம் நாள், 02.11.2023, வியாழக்கிழமை)
விந்தைபட அரங்கன் மகா சக்தி
விரைந்து உலகெல்லாம் பரவிவர
3. வருகவே கலியுகத்தில் மாற்றம்
வல்லமைபட அரங்கனால் நிகழும்
தருகின்ற அரங்கன் சீடர்களின் தர்மத்தால்
தரணிக்கே தனிப்பெரும் பாதுகாப்பு உருவாகும்
4. ஆகவே அரங்கனை நோக்கி
அகிலத்தார் ஞானம் தேடி வந்தால்
மிகையாக உலகோர்க்கு ஞான சித்தி
முருகப்பெருமான் என்னால் நடத்தி வைக்கப்படும்
5. உலகோர் கருணைகொண்டு அரங்கன் தர்மத்தை
ஒருவருக்கேனும் இயன்ற வண்ணம் தொடர்ந்து செய்தால்
ஆறுமுகன் என் ஆசி காட்சியோடு
அகிலத்தில் இனிப்பிறவாத பெரும்பேறு அடையக்கூடும்
6. கூடவே உலகெல்லாம் தர்மம்
குரு அரங்கா எனப்பெருகி நின்றால்
நாடெங்கிலும் தர்மவான்கள் ஆட்சி
ஞானிகளாட்சி ஞான ஆட்சி உதயமாகும்

7. ஆகவே அஞ்ஞான நிலைகளெல்லாம்
அகன்றோடி உலகைவிட்டு ஒழிந்து நின்று
ஆற்றல்பட ஞானவான்கள் நிறைந்த
ஞான பூமியாக ஞானிகள் வெளிப்பட்டு

8. ஞானவான்களை எல்லாம்
ஞானிகளாக்கி ஆறுமுகனார்
ஞான ஆட்சித்தரும் வண்ணம் நிலைமைகள் மாறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—